சார்வரி ஆடு புரட்டாசி மீ
செப்டம்பர் - அக்டோபர் 2020

மலர்: 3
இதழ்: 6

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

தேஸிக ஸந்தேஶம்

MONTHLY NEWSLETTER FROM:
SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email : svdd.mylai@gmail.com, web: www.svdd.com

ஸ்ரீஜயந்தீ உத்ஸவம் - ஆஸ்தானம்

சார்வரி ஆடு புரட்டாசி மீ
செப்டம்பர் - அக்டோபர் 2020

மலர்: 3
இதழ்: 6

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

தேஶிக ஸந்தேஶம்

திருக்கோவில் பூஜா காலங்கள் *

காலை

ஞாயிறு முதல் புதன் வரை			வியாழன் முதல் சனி வரை		
6.30	-	விச்வரூபம்	6.00	-	விச்வரூபம்
8.30	-	திருவாராதனம்	7.30	-	பொது தரிசனம்
9.45	-	சாற்றுமுறை			

12.00 - உச்சிகாலம்

மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

தர்மகர்த்தாக்கள்:

ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன் | ஸ்ரீ R. ராகவன் | ஸ்ரீ அழிசூர் R. ராகவன்

Editorial Board :

ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay

ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 24953799
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com

ஸ்ரீ:

ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்^{3}ரி ஸமம் ஸ்தா^{2}நம் ப்^{3}ரஹ்மாண்டே^{3} நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே^{3}வோ ந பூ^{4}தோ ந ப^{4}விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

‘திருவேங்கட மாமலை ஒன்றுமே தொழ நம்வினை ஓயுமே’ / ‘பிணி வீயுமாறு செய்வான் திருவேங்கடத்து ஆயன்’ என்பது ஆழ்வார் ஸ்ரீஸூக்தி. தற்சமய சூழ்நிலையில், திருவேங்கடத்து ஆயன் பிணி வீயுமாறு செய்த பின்னரே, நாம் ஆயனைத் தொழ முடிவது ! காத்திருந்தோம் ...

இதோ, பலன் கிடைத்தது. தன் திருவவதாரத் திங்களான பாத்ரபதத் திங்களை முன்னிட்டு, தன் செங்கண் சிறுச்சிறிதே நம்மேல் விழித்தான். திருக் கோயில் கதவுகளும் திறந்தன. நம் கண்களுக்கும் மனத்துக்கும் விருந்து அளித்தான் – அடடா, ‘திருக்கமலப்பாதம் வந்தென் கண்ணினுள்ளன ஒக்கின்றதே’ !!!

இது ‘தர்சன-ஸமானாகாரம்’ போன்ற துவக்கம்தான்; படிப்படியாக நிலைமை சீரடைந்து, வேதவொலியும் விழா ஒலியுமாக முன்னைய வண்ணமே கொண்டு விளங்கும் நாள் வெகு தொலைவில் இல்லை, என்ற நம்பிக்கை அளிக்கிறது.

நாமும் நம் பங்கிற்கு, அரசின் அறிவுறுத்தலின்படி, ஸந்நிதியிலும் சமூக-இடைவெளி / முகக் கவசம் / தூய்மை இவற்றை மேலும் சிறிது காலம் கடைபிடித்து, கொரோனா அரக்கனை முற்றும் ஒழிக்க உறுதியெடுப்போம். ஆழ்வார் அநுஸந்தித்தபடி, ‘ஓடுவார் விழுவார் உகந்தாலிப்பார் ... பாடுவார்களும் பல்பறை கொட்ட நின்று ஆடுவார்களும்’ ஆவதற்கான நாளை எதிர்பார்த்து நிற்போம்.

பாகவதர்கள் உகப்புக்காக ‘ஸந்தேசத்தைத்’ தொடரும் இம்மாத மலரில் நாம் கண்டு களிக்க இருப்பது....

சிறப்புக் கட்டுரைகளுடன் கீழ்க்கண்ட உத்ஸவங்களின் ஒளிப்படங்கள்:

- ✓ ‘ராமாநுஜ தயாபாத்ரம்’ தனியன் அவதார உத்ஸவம்
- ✓ கடை ச்ரவணம் (முன் அட்டை)
- ✓ ஸ்ரீ ஜயந்தீ உத்ஸவம்
- ✓ உறியடி உத்ஸவம்

கண்டு, வாசித்து இன்புறுமின்!

ஸ்ரீ:

God Has Answered Our Prayers!

FROM THE DESK OF TRUSTEES

The inordinately long separation from the Lord for the devotees is eventually over. And it's our own Peyazhwar's 'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்' moment again for all of us. Yes, Public Darshan at places of worship is back after over five months!

We devotees often tend to forget that the universe functions on the Lord's will, known as Sankalpam. He is both the proposer as well as the disposer. Without His Sankalpam nothing works or moves. A classic example is the building of the Ram Temple in Ayodhya.

I distinctly remember an incident when a very senior functionary of the Vishva Hindu Parishad visited the shrines of Sri Ranganathar, Thayar and Sri Kothanda Ramar in Srirangam. Standing before the deity, he proclaimed that "We will build a grand Ram Mandir at Ayodhya". I was standing by his side and told him that without Bhagavan Ram's Sankalpam no one can build a temple for Him and added that we, as devotees, should only appeal and pray to him for his blessings for a temple at Ayodhya. And now, after so many years of waiting and with the Lord's Sankalpam, the foundation for a grand Ram Temple in Ayodhya was laid on the 5th of August.

Fortunately for us, we didn't have to wait for years for the places of worship to reopen for the public. The Lord has answered our prayers and we can now worship Him at the temples, duly following some protective measures.

Our temple opened for the public on the 2nd September and we are strictly adhering to the guidelines issued by the government. We are overwhelmed by the co-operation extended by the devotees and hereby record our sincere thanks to them for the same.

Though the government has issued a number of guidelines to be followed, we have listed a few important things at the entrance of the temple. The temple timings have been temporarily revised, which has been published on Page 8 along with the guidelines.

The daily rituals are being carried out diligently and festivals like Ramanuja Daya Patram Thaniyan, Avathara Utsavam, Kadai Sravanam and Sri Hayagriva Jayanthi were performed.

We plan to conduct the annual Desikan Utsavam beginning on the 18th September, followed by the Pavitrotsavam.

We place on record our thanks to Smt. & Sri Gopal of Chemplast for their donation to the temple staff whose dedicated service during these difficult times merits appreciation.

ஸ்ரீ:

சார்வரி வருட புரட்டாசி மாத பஞ்சாங்கம்

ஆங்கில தேதி	தமிழ் தேதி	திதி	வாரம்	நக்ஷத்ரம்	உத்ஸவம்
செப்டம்பர் / அக்டோபர்	புரட்டாசி				
17.09.20	1	அமாவாசை (28.19) / 5.20 AM	வியாழன்	பூரம்	புரட்டாசி மாதப்பிறப்பு ஸர்வ மஹாளய அமாவாசை தேசிகன் கண்ணாடி அறைக்கு எழுந்தருளல்
18.09.20	2	ப்ரதமை	வெள்ளி	உத்தரம்	தேசிகன்உத்ஸவம் 1ம் நாள் காலை பல்லக்கு புறப்பாடு தேசிகன் திருமஞ்சனம் இரவு: யாளி வாஹனம்.
19.09.20	3	த்விதீயை	சனி	ஹஸ்தம் (4.34) / 7.49 AM / சித்திரை	தேசிகன் உத்ஸவம் 2ம் நாள் காலை பல்லக்கு புறப்பாடு தேசிகன் திருமஞ்சனம் மாலை: ஸூர்ய ப்ரபை
20.09.20	4	த்ருதீயை	ஞாயிறு	சித்திரை (00.24) / ஸ்வாதி	தேசிகன் உத்ஸவம் 3 ம் நாள் காலை பெருமாள் சின்னகருடன், தேசிகன் தங்கக்கேடயம். மாலை: ஸிம்ஹ வாஹனம்
21.09.20	5	சதுர்த்தி (4.44) 7.54 AM / பஞ்சமி	திங்கள்	விசாகம்	தேசிகன் உத்ஸவம் 4ம் நாள் காலை பல்லக்கு புறப்பாடு தேசிகன் திருமஞ்சனம் மாலை: சந்த்ர ப்ரபை
22.09.20	6	ஷஷ்டி	செவ்வாய்	அநுஷம்	தேசிகன் உத்ஸவம் 5ம் நாள் காலை பல்லக்கு புறப்பாடு தேசிகன் திருமஞ்சனம் மாலை: ஹம்ச வாஹனம்
23.09.20	7	ஸப்தமி	புதன்	கேட்டை	தேசிகன் உத்ஸவம் 6ம் நாள் காலை பல்லக்கு, சூர்ணாபிஷேகம் தேசிகன் திருமஞ்சனம் மாலை: குதிரை வாஹனம்
24.09.20	8	அஷ்டமி	வியாழன்	மூலம்	தேசிகன் உத்ஸவம் 7ம் நாள் காலை பல்லக்கு தேசிகன் திருமஞ்சனம் மதியம்: ஸ்ரீ ஹயக்ரீவ ஆராதனம். இரவு: அஷராப்யாஸ திருக்கோலம். மேனா பல்லக்கு
25.09.20	9	நவமி	வெள்ளி	பூராடம்	தேசிகன் உத்ஸவம் 8ம் நாள் காலை பல்லக்கு தேசிகன் திருமஞ்சனம் இரவு: யானை வாஹனம்
26.09.20	10	தசமி	சனி	உத்தராடம்	தேசிகன் உத்ஸவம் 9ம் நாள் காலை திருத்தேர். திருமஞ்சனம். இரவு தோட்ட உத்ஸவம்
27.09.20	11	ஏகாதசி	ஞாயிறு	ச்ரவணம்	தேசிகன் உத்ஸவம் 10ம் நாள் காலை: தேசிகன் மங்களாசாஸனம். பின்பு பெருமாள், தேசிகன் உள்புறப்பாடு. பெருமாள், தாயார், – தேசிகன் திருமஞ்சனம். திருமொழி சாற்றுமுறை. பத்தி உலாத்தல். ஒய்யாளி. மங்களகிரி புறப்பாடு. திருவாய்மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை
28.09.20	12	த்வாதசி	திங்கள்	அவிட்டம்	காலை: கந்தபொடி உத்ஸவம். ஸ்வாமி தேசிகன் 1 ஆம் நாள் விடையாற்றி, தேசிகன் திருமஞ்சனம் மாலைஆஸ்தானம்

29.09.20	13	த்ரயோதசி	செவ்வாய்	சதயம்	ஸ்வாமி தேசிகன் 2 ஆம் நாள் விடையாற்றி, காலை திருமஞ்சனம் ஆஸ்தானம். மாலை: பவித்ரோஸவ அங்குரார்ப்பணம். ம்ருத்ஸங்க்ரஹணம்
30.09.20	14	சதுர்தசி	புதன்	பூரட்டாதி	ஸ்வாமி தேசிகன் 3 ஆம் நாள் விடையாற்றி, காலை தேசிகன் திருமஞ்சனம் மட்டும். மாலை: அதிவாஸம்
01.10.20	15	பௌர்ணமி	வியாழன்	உத்தரட்டாதி	பவித்ரோத்ஸவம் 1 ஆம் நாள். காலை: திருமஞ் சனம் ஹோமம். பின்பு பவித்ரம் ஸமர்பித்தல். மாலை: பெருமாள். தேசிகன் உள்புறப்பாடு ஹோமம்
02.10.20	16	ப்ரதமை	வெள்ளி	ரேவதி	பவித்ரோத்ஸவம் 2 ஆம் நாள். காலை: – ஹோமம். மாலை: பெருமாள். தேசிகன் உள்புறப்பாடு ஹோமம்
03.10.20	17	த்விதீயை	சனி	ரேவதி (9.32 AM) / அச்வினி	பவித்ரோத்ஸவம் 3 ஆம் நாள். காலை: – ஹோமம். மாலை: பெருமாள். தேசிகன் உள்புறப்பாடு ஹோமம்
04.10.20	18	த்விதீயை (02.14) / த்ருதீயை	ஞாயிறு	அச்வினி (15.14) / 12.06 PM	பவித்ரோத்ஸவம் 4 ஆம் நாள். காலை: – ஹோமம். மாலை: பெருமாள். தேசிகன் உள்புறப்பாடு ஹோமம்
05.10.20	19	த்ருதீயை (07.04) / 8.50 AM	திங்கள்	பரணி (21.19) / 2.32 PM	பவித்ரோத்ஸவம் 5 ஆம் நாள். காலை: – ஹோமம். மாலை: பெருமாள். தேசிகன் உள்புறப்பாடு ஹோமம்
06.10.20	20	சதுர்த்தி (11.25) / 10.35 AM	செவ்வாய்	க்ருத்திகை (4.45 PM)	பவித்ரோத்ஸவம் 6 ஆம் நாள். காலை: – ஹோமம். மாலை: பெருமாள். தேசிகன் உள்புறப்பாடு ஹோமம்
07.10.20	21	பஞ்சமி	புதன்	ரோஹிணி (6.43)	பவித்ரோத்ஸவம் 7 ஆம் நாள். காலை: ஹோமம். மாலை: பெருமாள். தேசிகன் உள்புறப்பாடு ஹோமம், மஹா பூர்ணாஹுதி. திருமஞ்சனம். பவிரோத்ஸவ சாற்றுமுறை
08.10.20	22	ஷஷ்டி	வியாழன்	ம்ருகசீர்ஷம்	திருக்கச்சி நம்பிகள்
09.10.20	23	ஸப்தமி	வெள்ளி	திருவாதிரை	தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். உள்புறப்பாடு
10.10.20	24	அஷ்டமி	சனி	புனர்வஸு	ராமர் திருமஞ்சனம். ஆஸ்தானம்
11.10.20	25	நவமி	ஞாயிறு	புஷ்யம்	திருமால்வடை
12.10.20	26	தசமி	திங்கள்	ஆயில்யம்	திருமால்வடை
13.10.20	27	ஏகாதசி (10.25 AM)	செவ்வாய்	மகம் (34.53)	திருமழிசைப்பிரான்
14.10.20	28	த்வாதசி (6.29) / 8.41AM	புதன்	பூரம்	ஸ்ரீ ஆண்டாள்
15.10.20	29	த்ரயோதசி 1.26 (6.40 AM) / சதுர்தசி	வியாழன்	உத்தரம் (5.30 PM)	தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். உள்புறப்பாடு
16.10.20	30	அமாவாசை (49.59) / 2.06 PM	வெள்ளி	ஹஸ்தம்	பெருமாள், தாயார் திருமஞ்சனம். – உள்புறப்பாடு

ஸ்ரீ:

ஸ்வாமி தேசிகன் உகந்த திருவாய்மொழி

ஸ்ரீ உ.வே. ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

அறிமுகம்

''ஸம்ப்ரதாய பரிசுத்தி'' என்னும் ரஹஸ்ய க்ரந்தத்தில் ஸ்வாமி தேசிகன், இந்தக் கலியுகத்தில் நம் வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் ப்ரவர்த்தகர் ப்ரபந்நஜன கூடஸ்தரான நம்மாழ்வார் தான் என்று அறுதியிடுகிறார்.

ஆழ்வார் அருளின முதல் ப்ரபந்தமான திருவிருத்தத்தில் எம்பெருமானை அநுபவிப்பதற்கு விரோதியான ஸம்ஸார பந்தத்தை அறுத்துத் தந்தருளுமாறு அவனையே ப்ரார்த்திக்கிறார். இரண்டாவதான திருவாசிரியத்தில் அவ்வெம்பெருமான் தன்வடிவழகை எடுத்துக்காட்ட, அவன் அழகை அநுபவித்தார். பெரிய திருவந்தாதியிலே, எப்பொழுதும் போக்யனான எம்பெருமானை அநுபவித்து, அதன் காரணமாக ஆழ்வாருக்கு கண்ணனை மேன்மேலும் அநுபவிக்க வேண்டி அவ்வநுபவம் பெறமாட்டாத தாஹமாக தாமே உருவெடுத்து அவனுடைய குணங்களை ''அன்பே பெருகும் மிகவிதுவென் பேசீர்'' என்றும் ''நின்புகழில் வைகும் தம் சிந்தையிலும் மற்றினிதோ'' என்றும் ''நீ கதியாய் நெஞ்சே நினை'' என்று பேசியும் நினைந்தும் தரிக்கிறார்.

கடைசி ப்ரபந்தமான திருவாய்மொழியிலே உபயவிபூதி நாதனும் அனைத்துக் கல்யாண குணங்களின் இருப்பிடமாகவும், திருமகள், மண்மகள், நீளை முதலான பிராட்டிமார்களின் வல்லபனும், பரமபுருஷனுமான ஸ்ரீமந்நாராயணனை ஆழ்வார் தாம் தம் திருவுள்ளத்தாலே அநுபவித்து அவ்வநுபத்தின் தோன்றலாக அவனிடம் உள்ள ப்ரீதியினாலே அவனை ''உயர்வற உயர்நலம் உடையவன் யவன் அவன்'' என்று தொடங்கி அவனுடைய குணங்களைப் பலவாறு ஆயிரம் பாசுரங்களால் அநுபவிக்கிறார். மேலும் இந்தத் திருவாய்மொழியானது, மந்த்ர ரத்னமான த்வயத்தின் விவரணம் என்றும், ஸ்ரீவைஷணவ ஸம்ப்ரதாயத்தின் உயிரான ''அர்த்த பஞ்சகத்தின்'' ஸாரம் என்றும் பெரியவர்கள் பலவாறு போற்றுவர்.

நான்கு வேதங்களின் ஸாரார்த்தங்களை உள்ளடக்கிய இந்த மஹா க்ரந்தத்திற்கு பல பூர்வாசார்யர்கள் அற்புதமான உரைகளை எழுதி ஆழ்வாரிடம் தங்களுடைய பக்தியை வெளிபடுத்தியுள்ளனர். அவ்வரிசையில் மாறன் துணையடிக்கீழ் வாழ்வையுகந்த ஸ்வாமி ஸ்ரீதேசிகன் தமக்கே உரித்ததான பாணியிலே தம்முடைய மேதாவிலாசத்தைக் கொண்டு வடமொழியில் செய்யுள் வடிவிலே ''த்ரமிட உபநிஷத் தாத்பர்ய ரத்னாவளி'' மற்றும் ''த்ரமிட உபநிஷத் ஸாரம்'' எனும் இரண்டு நூல்களைக் கொண்டு இந்த திருவாய்மொழியில் ஆழ்வாரின் திருவுள்ளத்தை மிக அழகாகக் காட்டுகிறார். நூற்று முப்பது ச்லோகங்களையுடைய த்ரமிட உபநிஷத் தாத்பர்ய ரத்னாவளியில் முதல் பத்து ச்லோகங்களால் திருவாய் மொழியின் அறிமுகத்தையும், அதைப் பாடிய ஆழ்வாரின் பெருமையையும், அந்த பாசுரங்களின் பொருளான திருமகள்கேள்வனின் குணங்களையும், தாத்பர்ய ரத்னாவளியின் பயனையும் கூறுகிறார். இந்த பத்து ச்லோகங்களின் கருத்துக்களை அறிவதே இந்த கட்டுரையின் நோக்கம்.

திருவாய்மொழியின் ஏற்றம்

உலகில் பலபாஷைகளில் உள்ள அனைத்து க்ரந்தங்களில் ஸ்ரீசடகோபன் அருளிச்செய்த திருவாய்மொழியே ஸார தமமானது. ஒன்பது ரஸங்களுள் மிகவும் உயர்ந்ததான 'சாந்தி' ரஸம் வஸிக்கும் அந்தப்புரம் போன்றது இத்திருவாய்மொழி. இந்த க்ரந்தமாவது, ஸத்வம், ரஜஸ், தமஸ் எனும் மூன்று குணங்களாலும் சூழப்பட்ட இவ்வுலகில் இருந்து நம்மை விடுவித்து வைராக்யத்தை அளிக்கக்கூடியது.

மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்து இந்த ஸம்ஸாரக் கடலிலே தத்தளிக்கும் ஜனங்களுக்கு மறு கரையாகிறது ஆழ்வாரின் ஸ்ரீஸூக்தி. எப்பொழுதும் பெரியபிராட்டியாரைப் பிரியாமல் இருக்கும் பெரும்நிதியான எம்பெருமானை நமக்கு நேராகக் காணவைக்கும் இந்தத் திருவாய்மொழி என்று க்ரந்தத்தின் ஏற்றத்தை ஸ்வாமி தேசிகன் முதல் ச்லோகத்தினால் அறிவிக்கின்றார்.

ஸ்ரீதேசிகன் திருவாய்மொழி என்னும் கடலிலே மூழ்கி, தாத்பர்ய ரத்னாவளியை வெளிக்கொணர்வது

தேவதைகளின் ப்ரார்த்தனையின் பேரில் எவ்வாறு திருவேங்கடமுடையான் திருப்பாற்கடலைக் கடைந்தானோ, அதே போன்று தேவர்களைப் போன்ற பண்டிதர்களின் விண்ணப்பதை ஏற்று அந்தத் திருவேங்கடமுடையானின் மறு அவதாரமான ஸ்வாமி ஸ்ரீதேசிகன் திருவாய்மொழி எனும் பாற்கடலைக் கடைந்தார். ஆசார்யர்களால் நன்கு போதிக்கப்பட்ட தம்முடைய ஜ்ஞானம் எனும் மத்தைக் கொண்டு திருவாய் மொழியைக் கடைந்து அந்த ஆயிரம் பாசுரங்கள் ஒவ்வொன்றிலும் அந்தத் திருவேங்கடவனின் குணங்கள் எனும் ரத்னங்களை எடுத்து கோர்த்து ''த்ரமிட உபநிஷத் தாத்பர்ய ரத்னாவளி'' எனும் மாலையின் வடிவுகொண்ட இந்த

க்ரந்தத்தை வெளியிட்டருளினார் என்று இரண்டாம் ச்லோகத்தில் அநுஸந்திக்கிறார்.

ஆழ்வாரின் நாயிகா பாவத்தின் (பெண்தன்மையின்) தாத்பர்யம்

பாஞ்சாலியின் பேரழகிலே ஈடுபட்டு அவளை அடையவேண்டும் என்று ஆசைப்பட்ட அவளுடைய அந்தப்புரத் தோழிகளைப் போன்று, வைராக்ய புருஷரான ஆழ்வார், பரம போக்யனான எம்பெருமானுடன் எப்பொழுதும் கலந்து பரிமாற வேண்டும் என்று பக்தி கொண்டவர். ஆனால் அந்த எம்பெருமான் சில சமயங்களில் ஆழ்வாரைச் சோதிக்க வேண்டி அவரை பிரியும்பொழுது, அந்தப் பிரிவை பொறுக்கமுடியாமல் தம்முடைய ஆற்றாமையை வெளிக்கொணர்ந்து பெருமாளுக்கு உணர்த்துவதற்காகத் தம்மை ஒரு பெண்ணாக பாவித்து பல பக்ஷிகளை அவனிடம் தூது செல்லுமாறு அழைப்பார். பெருமாளிடம் உள்ள அளவில்லாக் காதலின் வெளிப்பாடக ஆழ்வாரின் பக்தியேச்ருங்கார ரஸமாக உருவெடுத்து ஆழ்வாரைப் பெண்தன்மையாக்குவதாகவும், ஆழ்வார் தூதுவிடும் பக்ஷிகள் ஆசார்யர்களே என்றும் தாத்பர்ய ரத்னாவளியின் மூன்றாவது ச்லோகத்தில் ஸ்வாமி நிகமாந்தகுரு அருளிச்செய்கிறார்.

திருவாய்மொழி தமிழில் அமைந்திருப்பதன் ஏற்றமும், அது இதிஹாச புராணங்கள் போன்று வேதத்திற்கு அங்கமாகுவதும்

அகஸ்த்ய மகரிஷியினால் வெளிக் கொணரப்பட்ட தமிழ்மொழியில் திருவாய்மொழி இயற்றப்பட்டதனால் இந்த க்ரந்தம் பஹுப்ரமாணமாகும். மேலும் வடமொழி வேதங்களைக் கற்க பல நிபந்தனைகள் உண்டு. ஆனால் திருவாய்மொழியை யாவரும் கற்கலாம். மேலும் இது பரமபுருஷனை உத்தேசித்து இயற்றியதால் நமது தாய்மொழியான தமிழிலேயே கானம் பண்ணலாம். ஸர்வ ரிஷிகளாலும் பண்ணப்பட்ட, வேதத்திற்கு அங்கமான, இதிஹாஸ புராணங்கள் போலே எம்பெருமானாலேயே மயர்வற மதிநலம் அருளப்பட்ட சடகோப ரிஷியினாலே கூறப்பட்ட திருவாய்மொழியும் வேதங்களுக்கு அங்கம் போலே விளங்கவல்லது என்று ஸ்வாமி நான்காம் ச்லோகத்தில் உரைக்கிறார்.

நான்கு வேதங்களின் ஸாரம் திருவாய்மொழி

திருவாய்மொழியில் முதல் இருபத்து ஒன்று பாட்டுக்களினாலே அனைத்து

உபநிஷதங்களின் பொருளையும் கூறுகின்றபடியால் 21 சாகையினால் ஆகிய ருக்வேதத்தின் ஸாரம் என்றும், ஆயிரம் சாகைகளை உடைய கானரூபமான ஸாமவேதத்தைப் போன்றே ஆயிரம் பாட்டுக்களையுடைய திருவாய்மொழியும் இருப்பதாலும், பத்துப் பாசுரங்களை உள்ளடக்கிய நூறு திருவாய்மொழிகளும் ஒவ்வொர் குணத்தைக் கூறுவதால் 100 சாகைகளைக் கொண்ட யஜுர்வேதத்தைப் போன்றதென்றும், சாந்தி ரஸத்தை ப்ரதானமாக உபதேசிப்பதால் அதற்கு அங்கங்களான எட்டு ரஸத்தையும் இந்தத் திருவாய்மொழியில் உள்ளடக்கியாதால் எட்டு சாகைகள் உடையதான அதர்வ வேதத்தின் பொருளையும் கூறுகின்றது என்றும் இந்தத் திருவாய்மொழி நான்கு வேதத்திற்கும் ஸமமானது என்றும் ஸ்வாமி ஐந்தாம் ச்லோகத்தில் ஸாதிக்கிறார்.

பகவானே ஸேவிக்கத் தக்கவனும் போக்யனுமாதல்

முனிவரான ஆழ்வார் இந்தத்திருவாய்மொழியில் முதற் பத்தில், பலனளிக்கும் பெருமானை ஸேவிக்கத்தக்கவன் என்றறிவிப்பதன் மூலம் அவனே மோக்ஷமடைவதற்கு உபாயம் என்றும், இரண்டாம்பத்தில் அவன் போக்யன் என்பதினால் மோக்ஷம் பெற்றவர்கள் அநுபவிக்கத் தக்கவனானவன் அந்த எம்பெருமான் என்றும், மூன்றாம் பத்தில் அடையப்படுபவனும் அநுபவிக்கத் தக்கவனுமான அந்த எம்பெருமான் அவனை அடைந்தவர்களின் தோஷங்களைப் போக்குவதும் ஸௌந்தர் யாதிகளாலே அநுபவிக்கக் கூடியதான திவ்ய திருமேனியை உடையவனென்றும், நான்காம் பத்திலே அவனைத் தவிர மற்ற ஐச்வர்யங்கள் கைவிடத்தக்கவை என்றும், ஐந்தாம் பத்திலிருந்து பத்தாம் பத்துவரை எம்பெருமானைத்தவிர வேறு உபாயத்தை கொள்ளாதவர் ஆழ்வார் என்றும் திருவாய்மொழியின் பொதுவான அர்த்தத்தை ஸாதிக்கிறார் ஸ்வாமி ஸ்ரீதேசிகன்.

எம்பெருமானின் கல்யாண குணங்களின் வரிசையே திருவாய்மொழி

இந்தத் திருவாய்மொழியில் ஒவ்வொரு பாசுரமும் எம்பெருமானின் ஒவ்வொரு குணம் கூறும். ஆக, பத்து குணங்களால் அந்தந்தத் திருவாய்மொழியின் ஸாரமான ஒரு குணம் தேறும். இவ்வாறு பத்து திருவாய்மொழியினால் நூறு பாசுரங்கள் அடங்கிய ஒருபத்தின் (முதற்பத்து, இரண்டாம் பத்து என்பதுபோல்) குணம் காட்டப்படும். பத்து பத்துக்களினால் உண்டான குணங்களினால் வேறொரு வஸ்துவைப்

பற்றியாகாமல் ஸ்ரீமானான எம்பெருமானே பரன் என்றும் அவனே உபாஸிக்கத்தக்கவன் என்பதும் திருவாய்மொழியின் மொத்த ஸாரமாகத் தேறும். ஆயிரம் பாட்டுக்கள் எனும் காரணத்தைக் கொண்டு எம்பெருமானின் பல குணங்களை சேர்த்து அநுபவிப்பதே ஆழ்வாரின் திருவுள்ளம் என்று ஸ்வாமி ஸ்ரீதேசிகன் அருமையாக வர்ணிக்கிறார் ஏழாம் ச்லோகத்தில்.

ஒவ்வொரு பத்தின் ஸங்க்ரஹப் பொருள்

முதற்பத்தின் ஸாரமான ''எம்பெருமான் ஸேவ்யனாயிருப்பதனாலும்'', இரண்டாம் பத்தின் ஸாரமான ''அவன் போக்யனாயிருபதினாலும்'', மூன்றாம் பத்தின் ஸாரமான ''அவன் திவ்யமங்கள விக்ரஹமுடையவனாகையாலும்'', நான்காம் பத்தில் ''அவன் எல்லா போக்யங்களைக் காட்டிலும் மேம்பட்டிருப்பதினாலும்'', ஐந்தாம் பத்தில் '' எல்லாபுருஷார்த்தங்களையும் அவற்றின் காரணங்களையும் அளிப்பதாலும்'', ஆறாம் பத்தில் ''அவன் திருவடிகளை அடைந்தவர்களுக்கு அவன் வசப்படுவதாலும்'', ஏழாம் பத்தில் ''அவனை அடைந்தவர்களின்இன்னல்களைப்போக்குவதாலும்'', எட்டாம் பத்தில் ''பக்தர்களின் இஷ்டத்திற்கிணங்கி நடந்து கொள்கிறவனாகையாலும்'', ஒன்பதாம்பத்தில் ''ஒருகாரணமுமின்றி அவனை அடைந்தவர்களுக்கு நன்மை செய்யக்கூடியவனாகையாலும்''

பத்தாம் பத்தில் ''நல்வழி நடப்பதற்குத் தானே துணையிருப்பதாலும்'' ஸ்ரீதரனான எம்பெருமான் எல்லோருக்கும் தானே உபாயமாகின்றான் என்றும், பத்து குணங்கள் யாவை, அவற்றால் எப்படி பரமார்த்த சித்தி ஏற்படுகிறது என்பதையும் தெளிவுபட எட்டாவது ச்லோகத்தால் ஸ்வாமி ஸ்ரீதேசிகன் அருளுகிறார்.

ஆழ்வார் வழியை ஸ்வாமி பின்பற்றும் வகை

முனிவர்களுள் தலைவரான ஆழ்வார், எம்பெருமானின் எண்ணற்ற குணங்களைக் கருத்தில்கொண்டு ஆயிரம் பாட்டுக்களை அருளியுள்ளார். அதில் தாம் ஒவ்வொரு பாட்டிலும் எந்த குணம் ஆழ்வாரின் மனதில் உள்ளது என்பதை ஆராய்ந்து அறிந்து அந்தந்த பாசுரங்களில் பொதிந்துள்ள குணங்களை எடுத்து இந்த ரத்னாவளியை இயற்றியதாகவும், சில குணங்கள் மீண்டும் மீண்டும் ஆழ்வார் கூறியிருந்தாலும் அவை வெவ்வேறு பலன்களுக்காகக் கூறுகிறார் என்றும், ஆகவே ஆழ்வார் ஸாதிக்கும் ஆயிரம் குணங்களைக் கூறுவதே தம்முடைய நூலின் நோக்கம் என்றும் ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் ஒன்பதாவது ச்லோகத்தில் அருளிச்செய்கிறார்.

த்ரமிட உபநிஷத் தாத்பர்ய ரத்னாவளியை அநுஸந்திப்பதன் பலன்

சரணமடைந்த பாண்டவர்க்காய் மாயன் அன்று ஐவர் தெய்வத்தேரினில் செப்பிய கீதையின் செம்மைப் பொருளான சரம ச்லோகத்தில் மொழிந்த, அந்த கீதாசார்யனே உபாயம் என்றும் உபேயம் என்றும் போற்றும் பாகவதர்களின் ஆதரத்தின் பயனாகவும், கண்ணனைப் பெற வேண்டி அது தாஹமாக உருவெடுத்த, ஸ்ரீமத்பாகவத புரணத்தில் ப்ரஸித்தி பெற்ற தாம்ரபர்ணி நதிக்கரையில் திருக்குருகூரில் அவதரித்த, ஸ்ரீசடகோப முனிவரால் இயற்றப்பட்ட ஸர்வருக்கும் பொதுவான இந்த திருவாய்மொழியின் ஸாரமான இந்த த்ரமிட உபநிஷத் தாத்பர்ய ரத்னாவளி எனும் தம்மால் இயற்றப்பட்ட செய்யுளானது இதைப் படிப்பவர்களின் ஹ்ருதயத்திலே வைத்து தரிக்கப்பட வேண்டியது என்று ஸ்வாமி ஸ்ரீதேசிகன் இந்த ரத்னாவளியில் திருவாய்மொழிக்கு முன்னுரையாக பத்துப் பாசுரங்களைக் கொண்டு அழகாக அருளிச்செய்கிறார்.

இவ்வளவு கீர்த்திபெற்ற திருவாய்மொழியையும், அதன் வ்யாக்யனமானதும் ஸார தமமானதுமான தாத்பர்ய ரத்னாவளியையும் ஸதாசார்யன் பக்கலிலே அர்த்த விசேஷங்களைக் கேட்டு ஸ்வாமி ஸ்ரீதேசிகனின் கருணைக்கு இலக்காகுவோம்! ❊

ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்

மயிலாப்பூர், சென்னை - 4. ☎ 24953799

ஸேவார்த்திகள் கீழ்கண்ட விதிமுறைகளைக் கடைப் பிடிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்

- முகக் கவசம் (Mask) கண்டிப்பாக அணியவேண்டும். இல்லையேல் கோவிலுக்குள் செல்ல அனுமதி கிடையாது.
- கோவிலுக்குள் நுழையும் முன் கை, கால்களை நன்கு சுத்தம் செய்துகொள்ள வேண்டும்.
- அர்ச்சனை செய்வதற்கு அனுமதி இல்லை. ஆகவே, புஷ்பம் மற்றும் அர்ச்சனை தட்டு கொண்டு வர வேண்டாம்.
- சமூக இடைவெளியுடன் வரிசையில் நின்று ஸேவிக்க வேண்டும்.
- ஆலயத்தின் ப்ரதான வாயிலில் நுழைந்து ஸேவித்து விட்டு, தேசிகன் ஸந்நிதிக்கு எதிரில் உள்ள வாயில் வழியாக வெளியே செல்ல வேண்டும்.
- உடல் வெப்ப நிலை பரிசோதனைக்குப் பிறகே ஸேவார்த்திகள் கோவிலினுள் அனுமதிக்கப் படுவர். வெப்ப நிலை (F) 98.4°-க்கு அதிகமாக இருந்தால் அனுமதி கிடையாது.

தர்சன நேரம்:

காலை 8.30 முதல் 10.30 வரை
மாலை 4.30 முதல் 6.30 வரை
இரவு 7.45 மணிக்கு சயனம்

ஸ்ரீஜயந்தீ உறியடி உத்ஸவம் புறப்பாடு

ஸ்ரீ:

ஸ்ரீஜயந்தீ உறியடி உத்ஸவம் புறப்பாடு



ஸ்ரீ:

கண்ணுக்கினியன

ஸ்ரீஜயந்தீ உறியடி உத்ஸவம் புறப்பாடு

ஸ்ரீ:

ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

திருமயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகன் வார்ஷிக மஹோத்ஸவ பத்திரிகை

கலயே ஸततம் கருணா ஜலதிம் கருணா விஷயம் கமலாதிபதே: ।
கலிவைரி ஶடாரி வசோ ரஸிகம் கவிதார்க்கிக கேஸரி ஸூரிகுரும் ॥

कलये सततं करूणा जलधिं करूणा विषयं कमलाधिपतेः
कलि वैरि शठारि वचो रसिकं कवितार्किक केसरि सूरि गुरूम्

மாமயிலைப்பதியதனில் ஸ்ரீமத் வேதாந்ததேசிகன் ஸந்நிதியில் நாளது சார்வரி வருஷம் புரட்டாசி மாதம் 2ம் தேதி 18.09.2020 வெள்ளிக்கிழமை முதல் நடைபெறும் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் வார்ஷிக மஹோத்ஸவத்திற்கு ஸகல ஆஸ்திகர்களும் எழுந்தருளி மேற்படி உத்ஸவத்தை சிறப்பித்து, ஆசார்ய ப்ரஸாதம் பெற்று ஆனந்தித்து அடியோங்களையும் தன்யராக்கும்படி ப்ரார்த்திக்கின்றோம். புரட்டாசி 11ம் தேதி 27.09.2020 ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீவேதாந்த தேசிகன் சாற்றுமுறை நடைபெறும்.

தற்பொழுது நிலவி வரும் அசாதாரண சூழ்நிலை (கொரோனா) மற்றும் அரசாங்க உத்தரவின் பேரிலும், இவ்வருட உத்ஸவம் தேவஸ்தானத்திற்குள் நடத்துவதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை ஆஸ்திகர்களுக்கு தெரியப்படுத்துகிறோம்.

N. கஸ்தூரிரங்கன், R. ராகவன், அழிசூர் R. ராகவன் - தர்மகர்த்தாக்கள்

உத்ஸவ விபரம்/ நிகழ்ச்சி நிரல்

நாள்	உற்சவம்	நேரம்	உபயதாரர்
17.09.20 (வியாழன்)	ஸ்வாமி தேசிகன் கண்ணாடியறைக்கு எழுந்தருளல்	இரவு 8:00	ஸ்ரீ. C.R. ராகவன் குடும்பத்தினர்
18.09.20 (வெள்ளி)	தங்க கேடயம்	காலை 7:00	1. ஸ்ரீ. T.C. ரங்கராஜன், 2. ஸ்ரீ ஆனந்த் ரங்கநாதன், 3. ஸ்ரீமதி லக்ஷ்மி ராமபத்ரன்
	யாளி வாஹனம்	இரவு 7:00	Electoral Board
19.09.20 (சனி)	தங்க கேடயம்	காலை 7:00	1. ஸ்ரீமதி எச்சம்மாள் பண்டு 2. ஸ்ரீ K. ராஜகோபால்
	சூர்யப்ரபை	இரவு 7:00	1. ஸ்ரீமதி எச்சம்மாள் பண்டு 2. ஸ்ரீ V. ராஜகோபால்
20.09.20 (ஞாயிறு)	ஸ்ரீ பெருமாள் கருட வாகனம், ஸ்ரீ தேசிகன் தங்க கேடயம்	காலை 7:00	1. ஸ்ரீமதி பத்மா சாரங்கன் குடும்பத்தினர், 2. ஸ்ரீ P. ஸ்ரீநிவாஸராகவன் குடும்பத்தினர்
	சிம்ஹ வாஹனம்	இரவு 7:00	1. ஸ்ரீ S.R.R. ஆசார்யா குடும்பத்தினர், 2. ஸ்ரீ T.P. பத்மநாபன்
21.09.20 (திங்கள்)	தங்க கேடயம்	காலை 7:00	1. ஸ்ரீ.R. வெங்கடேஷ், 2. ஸ்ரீமதி ஸ்ரீநிவாஸன்
	சந்திரப்ரபை	இரவு 7:00	1. ஸ்ரீ T.T. ரகுராம், 2. ஸ்ரீ குஞ்சிதபாதம்
22.09.20 (செவ்வாய்)	தங்க கேடயம்	காலை 7:00	1. ஸ்ரீ V.A. ரகு குடும்பத்தினர், 2. ஸ்ரீ S.T. ராகவன் குடும்பத்தினர் 3. ஸ்ரீமதி கனகம்மாள் பண்டு
	ஹம்ஸ வாஹனம்	இரவு 7:00	1. ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் K. ஸ்வாமி, 2. ஸ்ரீ A. நரஸிம்மன்
23.09.20 (புதன்)	சூர்ணாபிஷேகம், தங்க கேடயம்	காலை 6:30 காலை 7:00	1. ஸ்ரீ V.P. ப்ரேம் குமார் 2. ஸ்ரீமதி P.R. விஜயலக்ஷ்மி பண்டு
	குதிரை வாஹனம்	இரவு 7:00	1. ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன் 2. ஸ்ரீமதி ரமாமணி ராஜகோபாலன்

ஸ்ரீ:

நாள்	உற்சவம்	நேரம்	உபயதாரர்
24.09.20 (வியாழன்)	தங்க கேடயம்	காலை 7:00	1. ஸ்ரீ V.R. ராஜகோபால், 2. ஸ்ரீ V. கண்ணன்
	ஸ்ரீ ஹயக்ரீவ ஆராதனம்	மாலை 4:00	ஸ்ரீ ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி பரகாலமடம், மைசூர்
	மேனா பல்லக்கு **(அக்ஷராப்யாச திருக்கோலம்)**	இரவு 7:00	1. ஸ்ரீ N. நாராயணன் ராம்ஜி, 2. ஸ்ரீ சஞ்ஜீவ் செல்லப்பா, 3. ஸ்ரீ P.R. ராமாநுஜம்
25.09.20 (வெள்ளி)	மேனா பல்லக்கு	காலை 7:00	1. ஸ்ரீ மாடபூசி சுதர்ஸனம் ஐயங்கார் பண்டு 2. ஸ்ரீ S.S. ராகவன்
	யானை வாஹனம்	இரவு 7:00	1. ஸ்ரீ G. வாசுதேவன், 2. ஸ்ரீ T.V. ராமாநுஜம்
26.09.20 (சனி)	தங்க கேடயம்	காலை 7:00	ஸ்ரீ ஸ்ரீநிவாஸ கைங்கர்ய ஸபா
	தங்க கேடயம்	இரவு 7:00	1. ஸ்ரீ N.S. கண்ணன், 2. ஸ்ரீ C. கிருஷ்ணன்
27.09.20 (ஞாயிறு)	ஸ்ரீ தேசிகன் சாற்றுமுறை மூலவர் திருமஞ்ஜனம்		தேவஸ்தானம்
	மங்களாசாஸனம்	காலை 5:00	1. ஸ்ரீ S. வரததேசிகன் & ஸ்ரீ V. வெங்கடேஷ்
	ஸ்ரீ பெருமாள், ஸ்ரீ தேசிகன் உள் புறப்பாடு	காலை 8:00	வனபோஜனம் ட்ரஸ்ட்
	திருமஞ்ஜனம்	காலை 9:00	ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அசோஸியேஷன் (பதிவு)
	பத்தி உலாத்தல்	மாலை 6:00	
	ஒய்யாளி, திருப்பாவை சாற்றுமுறை, மங்களகிரி புறப்பாடு, திருவாய்மொழி சாற்றுமுறை	இரவு	
28.09.20 (திங்கள்)	கந்தப்பொடி வஸந்தம்	காலை 7:00	ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அசோஸியேஷன் (பதிவு)
	விடையாற்றி உத்ஸவம் முதல் நாள் – திருமஞ்ஜனம்	மாலை 4:00	ஸ்ரீமதி சுபத்ரா பாலாஜி குடும்பத்தினர்
29.09.20 (செவ்வாய்)	விடையாற்றி உத்ஸவம் இரண்டாம் நாள் – திருமஞ்ஜனம்	காலை 9:30	ஸ்ரீ S. சுந்தரம்
30.09.20 (புதன்)	விடையாற்றி உத்ஸவம் மூன்றாம் நாள் – திருமஞ்ஜனம்	காலை 9:30	ஸ்ரீ P. கோபால்ஸ்வாமி ஐயங்கார் பண்டு
23.10.20 (வெள்ளி)	விடையாற்றி உத்ஸவம் 27ம் நாள் – திருமஞ்ஜனம்	காலை 10:00	ஸ்ரீ. உ.வே. பி.வி.ராகவன் (பண்டு)
	உள் புறப்பாடு	இரவு 7:00	ஸ்ரீ. மதுதேசிகன் குடும்பத்தினர்

(பிரதி தினம் காலை 8:00 மணிக்கு திருமஞ்ஜனம் நடைபெறும்)

Note: 1. CONTRIBUTIONS, IF ANY, CAN BE MADE BY WAY OF CASH OR CHEQUE (in favour of Sri Vedantha Desikar Devasthanam)

2. Those who have not updated their contact details like mobile number, E-mail ID are requested to update the same, in order to ensure frequent and speedier communication.

ஸ்ரீ:

ஸ்ரீ:

ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

திருப்பவித்ரோத்ஸவ பத்திரிகை

பசலி 1430 ~ சார்வரி வருஷம் ~ 2020

01.10.2020 முதல் 07.10.2020 வரை

ஸ்ரிய:பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய், அர்ச்சாரூபியாய், அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பனாய் ஆச்ரிதோஜ்ஜீவனார்த்தம் ஆங்காங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவனும், முதலாழ்வார்கள் மூவரில் ஒருவராகிய, ஸ்ரீபேயாழ்வார் அவதாரஸ்தலமுமாயும், தூப்புல் நிகமாந்த மஹாதேசிகனைக் கொண்டு அனுபவித்து வரும் ஸ்தலமுமாகிய திருமயிலையில் எழுந்தருளியிருப்பவனுமான ஸ்ரீதிருவேங்கடமுடையான் நாளது **சார்வரி வருஷம் புரட்டாசி மாதம் 15ம் தேதி (01.10.2020) வியாழக்கிழமை முதல் பவித்ரோத்ஸம்** ஆரம்பித்து நடத்திக் கொள்வதாக ஸங்கல்பித்துக் கொண்டிருக்கிறான்.

மேற்படி உத்ஸவத்தில் வேதபாராயணம், அத்யாபகம், க்ரந்த பாராயணம் ஆகிய கைங்கர்யங்களில் ஸ்வாமிகள் அன்வயித்து, மாமயிலை திவ்யதம்பதிகள், ஸ்ரீபேயாழ்வார் மற்றும் ஸ்வாமி தேசிகனின் க்ருபாகடாக்ஷத்திற்கு பாத்திரர்களாக வேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

அங்குரார்ப்பணம் – 29.09.2020 – செவ்வாய்கிழமை மாலை

அதிவாஸம் – 30.09.2020 – புதன்கிழமை மாலை

தினசரி ஹோமம் – காலை 8:00 மணி மற்றும் இரவு 7:30 மணி

மஹாபூர்ணாஹுதி – 07.10.2020 – புதன்கிழமை

N. கஸ்தூரிரங்கன், R. ராகவன், அழிசூர் R. ராகவன்

தர்மகர்த்தாக்கள்

நாள்	காலை உத்ஸவ உபயம்	காலை ததீயாராதனை உபயம்	மாலை உத்ஸவ உபயம்	மாலை ததீயாராதனை உபயம்
29.09.20 (செவ்வாய்)	அங்குரார்ப்பணம் (மாலை) ஸ்ரீ சேனைநாதன் புறப்பாடு	—	ஸ்ரீ. K.L.ராமதுரை	—
30.09.20 (புதன்)	அதிவாஸம் (மாலை)	—	அத்திகிரி அருளாளன்	—
01.10.20 (வியாழன்)	ஸ்ரீமதி K.R. சித்ரா கிருஷ்ணஸ்வாமி	1. ஒலக்கூர் ஸ்ரீ R. ஸ்ரீநிவாஸன் 2. ஸ்ரீ S. ரவிச்சந்திரன்	ஸ்ரீ N.S. பார்த்தஸாரதி	1. ஸ்ரீ K. ராஜகோபாலன் 2. ஸ்ரீ N.சேஷாத்ரி
02.10.20 (வெள்ளி)	1. ஸ்ரீமதி ஜானகியம்மாள் பண்டு 2. ஸ்ரீ S.பத்மநாபன்	ஸ்ரீ K.R. ராமஸ்வாமி ஸ்ரீ R. பார்த்தஸாரதி	1. ஸ்ரீ P.V. ராகவன் (பண்டு) 2. ஸ்ரீ மதுராந்தகம் ஸ்ரீனிவாசன்	1. ஸ்ரீ N.S. வரதாச்சாரி 2. ஸ்ரீ. நந்தகுமார்
03.10.20 (சனி)	ஸ்ரீமதி பத்மா ராமானுஜம்	ஸ்ரீ S.V.S. ராகவன் ஸ்ரீ. R. ராமக்ருஷ்ணன்	ஸ்ரீ A.N.S. சுந்தரம்	1. ஸ்ரீ A.N.S. சுந்தரம் 2. ஸ்ரீ L.V. நரஸிம்மன்
04.10.20 (ஞாயிறு)	ஸ்ரீ T.V. நரஸிம்மன்	1. ஸ்ரீ D. சுந்தரராஜன், 2. ஸ்ரீமதி D.சுஜாதா	ஸ்ரீ Dr. E. ஸ்ரீனிவாசன்	1. ஸ்ரீ T.M. ரவி நரஸிம்மன் 2. ஸ்ரீ M.P. ராஜா
05.10.20 (திங்கள்)	ஸ்ரீ S. அருண்	ஸ்ரீ M.D. சுதர்ஸனம் ஐயங்கார் (பண்டு) ஸ்ரீமதி ப்ரேமா பார்த்தஸாரதி	ஸ்ரீ N.K. ரங்கஸ்வாமி ஐயங்கார் குடும்பம்	1. ஸ்ரீ R. சம்பத், 2. ஒலக்கூர் ஸ்ரீ R. ராஜகோபாலன்
06.10.20 (செவ்வாய்)	ஸ்ரீ S. சத்யநாராயணன் & ஸ்ரீ N.கேசவன்	ஸ்ரீ V.J. பார்த்தஸாரதி ஸ்ரீ பத்மாவதி கைங்கர்ய ஸபா ஸ்ரீமதி T.V. சாந்தா	1. ஸ்ரீமதி கமலா & சுமைதாங்கி கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் குடும்பத்தினர் 2. ஸ்ரீமதி R. மஹாலட்சுமி	ஸ்ரீ T.M. ராஜகோபாலன் ஸ்ரீ. R. முகுந்தன்
07.10.20 (புதன்)	1. Official Trustee of Tamilnadu CKD Mudaliar & Seshacharulu Trust 2. கீழச்சேரி ஸ்ரீ S. ராகவன்	ஸ்ரீ P.D. ராமஸ்வாமி ஐயங்கார் ட்ரஸ்ட்	1. Official Trustee of Tamilnadu CKD Mudaliar & Seshacharulu Trust 2. ஸ்ரீ. வஸந்த் ஷான்பாக் பூர்ணாஹுதி திருமஞ்ஜனம் ஸ்ரீநிவாஸன் K. ஸ்வாமி	ஸ்ரீ P.D. ராமஸ்வாமி ஐயங்கார் ட்ரஸ்ட்

பட்டு பவித்ரங்கள் உபயம் : Dr. திலீப் க்ருஷ்ணா; பிரதி தினம் காலை, மாலை க்ஷீர கைங்கர்யம் உபயம் : ஸ்ரீமதி ஹேமலதா ரமாமணி

CONTRIBUTIONS IN KIND / CASH ARE WELCOME

ஸ்ரீ:

கண்ணுக்கினியன



கடை ச்ரவணம் புறப்பாடு

ஸ்ரீ:

கண்ணனின் குழலிசை

ஸ்ரீ உ.வே. திருவயிந்தை திருவாழி க்ருஷ்ணதேசிகாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

எம்பெருமான் தன்னுடைய ஒவ்வொரு அவதாரத்திலும் ஆச்சர்ய சேஷ்டிதங்கள் மூலம் தன்னை ஆச்ரயித்தவர்களை மகிழ்விப்பதையே நோக்காக உடையவன். இது க்ருஷ்ணாவதாரத்தில் மிக அதிகமாக இருந்தது. இங்கே, தன்னுடைய திருமேனி அழகு, அன்பான வார்த்தை, சிறு சிறு குறும்புகள், வெண்ணை களவு, கட்டுண்ணப் பண்ணுதல், கோவர்த்தன தாரணம் போன்றவை பல இருந்தாலும், தானே வேணு கானம் இசைத்து மகிழ்வித்தது மிகவும் உயர்ந்தது.

வேணு என்று சொல்லப்படும் மூங்கில் குழலில் தன் மூச்சுக் காற்றை இசையாகக் கொடுத்து யாவரையும் மகிழ்வித்த ஸாமர்த்யன் கண்ணண். அந்த மூங்கில் செய்த பாக்யம் தான் என்னே? தன் மைத்துனன்மார்க்காய் பாரதப்போரில் ஒரு தேரில் நின்று **பாஞ்சஜன்யம் வாய் வைத்துப்** போர் முரசு கொட்டினான். எனவே அந்த சங்கம் பீதகவாடைப் பிரானின் அதர ஸ்பர்சம் பெற்றது. **வாய்ச் சுவையும் நாற்றமும் விருப்புற்று கேட்கின்றேன் சொல் ஆழி வெண் சங்கே** என்ற கோதையின் திருவாக்கை நோக்குக. இங்கு மூங்கில் கழி எம்பெருமான் திருவாயின் ஸம்பந்தம் பெற்று வேணு கானம் இசைத்தது.

ஸௌலப்யசீலனாயும் ஹேயப்ரத்யநீகனாயும் உள்ள பெருமான் எவ்வாறு தான் குழல் ஊதுகின்றான்? அவன் குழல் ஊதும் அழகு தான் என்ன? அதன் இனிமை தான் எவ்வளவோ? என்று நாம் அறிய நினைத்தால், அது நம்மால் விவரிக்க இயலாது. ஏனெனில், அது **தனக்கும் தன் தன்மை அறிவரியானான** கண்ணனின் வேணு கானம் ஆயிற்றே! அவ்வழகை ஆழ்வாராதிகளால் தான் அருளிச்செய்ய இயலும். அவன் இசைக்கும் கீதத்தில் யாவரும் வந்து எவ்வாறு மயங்கிக் கிடக்கின்றனர்? அனைவருக்கும் மயக்கம் வரும் வரையில் ஊதுவானோ? அல்லது அவன் ஊதுவதால் அனைவரும் மயங்குகின்றனரோ? அதை பாகவதர்களாகிய நாம் பெரியாழ்வாரின் துணை கொண்டு இங்கு சற்று அநுபவிப்போம்!

நாவலம் 3-6

அடர்ந்த கானகத்தில் நிற்கும் மரங்களில் அவன் தன் திருமேனியை ஆயாஸமாக சாய்த்துக் கொள்கிறான். ஆய்ப்பாடிச் சிறுவர்களை தனது இடது தோளில் சாய்த்துக் கொண்டு இரண்டு திருக்கரங்களையும் குழலில் கொடுத்து தன் அழகிய புருவங்களை

நெரிக்கின்றான். தன் நாபிக்கமலத்தில் இருந்து மூச்சுக் காற்றினை குழலில் செலுத்தி கானம் இசைக்கும் போது அவனுடன் இருக்கும் மங்கைமார்கள், மயில் போன்றும், மான் போன்றும் துள்ளிக் குதித்தும் தங்கள் கரிய கூந்தல் அவிழ, உடையும் கலைந்து அவற்றை கைகளில் பற்றி ஓடுகின்றனர்.

வானிளவரசு வைகுந்தக்குட்டனின் புல்லாங்குழல் இசை கேட்டு அவன் திருவடிகளைச் சுற்றி வரும் பசுக்கள் மேய்க்கும் நண்பர்கள், நம்பிகள், ஆச்சியர்கள் மட்டுமின்றி, மேல் நாட்டு மக்களான நித்ய ஸூரிகள் கோஷ்டியில் இருக்கும் இளமங்கையர்களும் தங்கள் மலர்க் கண்கள் நெகிழ்ந்து, பனித்து, மனம் உருகி, திருமேனியும் வியர்த்து, தம்மை அறியாமல் கண்ணனின் வேணுகான கீத மழையில் நனைகின்றனர்.

இவன் ஏன் குழலை கானகத்தில் ஊதுகிறான்? கம்ஸனின் உத்தரவின் பேரில் அஸுரக்கூட்டம் பலப்பல வடிவைக் கொண்டு, புல், தாவரம், ஸர்ப்பம் போன்று காத்திருந்து கண்ணனின் கதையை முடிக்க எத்தனிக்கும் போது, அவனே கானகம் படியிலே உலவி உலவிக் குழலூதினான். அவன் அலைந்து அலைந்து ஊதும் போது, தன் திருவடி கொண்டு, வெவ்வேறு

வடிவில் உள்ள அஸுரர்களை ஸம்ஹாரம் செய்கிறான். அவன் குழலிசையில் வானுலக மங்கையர்கள், தங்கள் நாட்டியம், பாடல் தொழில் மறந்து மயங்கி நின்றனர்.

ஸ்தூணா பிதாமஹ்ய பூத் என்கிறபடி ப்ரஹ்லாதன் பொருட்டு க்ஷண மாத்ரத்தில், தூணின் வயிற்றில் அவதரித்து, தெள்ளிய சிங்கமானான். அவனே கண்ணனாய் குழல் ஊதும் போது அக்கானத்திலே மயங்கி, நாரதனும், தும்புருவும், கின்னரர்களும் அவன் எதிரே இனிமேல் தங்களுடைய கின்னரம் முதலிய எந்த வாத்யத்தையும் தொடமாட்டோம் என்றனர். ஏனெனில் கண்ணனின் அமுத கானத்தின் முன் அவர்கள் இசைக்கும் இசை எம்மாத்திரம் என்று எண்ணி வெட்கிப் போகின்றனர்.

தேவகியின் சிறிய சிங்கமான கண்ணனின் குழலிசையில் நனைந்தவர்கள் இடர் உற்றனர். பசுக்களை மேய்க்கும் இடையர்களின் பெரும் கூட்டத்தில் பாம்பணைப் பள்ளிக் கொள்ளும் பரமன் வேணுகானம் இசைக்கும் போது, அந்த இசையானது அமரலோகம் வரை சென்று தேவர்கள் தங்களுக்கு மறையவர்கள் அளிக்கும் ஹவிஸ்ஸையும் ஸ்வீகரிக்க மறந்து ஆய்ப்பாடிக்கே விரைந்து வருகின்றனர். அவர்கள் இந்த கோவிந்தனை என்றும் விடாதவராய் அவன் இசையில் நனையத் தொடர்ந்து வருகின்றனர்.

கோவிந்தன் தன்னுடைய சின்னஞ்சிறிய அழகிய விரல்களை வளைத்து, அசைத்து, புருவம் உயர்த்தி குழல் ஊதுகிறான். அப்போது ஐந்தறிவு படைத்த ப்ராணிகளும் மயங்குகின்றன. பறவைக் கணங்கள் தங்கள் கூடுகளை விட்டுப் பறந்து கண்ணனை வட்டமிடுகின்றன. கறந்த பால் கொடுக்கும் ஆவின் கூட்டம் தமது கால்களைத் தரையில் நன்கு பரப்பிக்கொண்டு, முகம் கவிழ்த்து தமது செவிகளை ஆட்டி ஆட்டி ஆனந்தித்து ஆமோதிக்கின்றன.

பிரமகுருவான பீதகவாடைப்பிரான், அருங்கல உருவு கொண்டு தன்னுடைய திருமுடியிலே கருங்கண் தோகை மயில் பீலி அணிந்து கொண்டு அருமையாக கீதம் இசைக்க, அந்த கானத்திலே மயங்கிக் கிறங்கும் மான் கூட்டம் மிரண்ட கண்களுடன் மருட்சிக் கொண்டு மேய்தலையும் விட்டுவிட்டு, ஏற்கனவே மேய்ந்த புற்களையும் அசைபோடவும் மறந்து, அவைகளை கடைவாயின் வழியே வெளியே தள்ளும் காட்சியானது சுவற்றில் எழுதிய சித்திரங்கள் போன்று தோன்றுகின்றன.

கார்நிறக் கண்ணனின் வேணு கானம் கேட்டு மயங்கி அவன் அருகில் இருக்கும் ஸ்தாவர வகைகள் அனைத்தும், தன் பூக்களில் இருந்து தேனைப் பாய்ச்சுகின்றன. மலர்களை உதிர்த்து, தமது கிளைகளை கண்ணன் செல்லும் இடம் எல்லாம் தாங்களும் திரும்பித் திரும்பி அதன் கொம்புகளை வளைத்து அவன் வேணு கானத்திற்கு தாஸ்ய பாவத்துடன் நமஸ்காரம் பண்ணி நமக்கும் பாடம் கற்பிக்கின்றன.

ஆழ்வாரின் க்ருஷ்ணாநுபவம் இங்கு நன்கு கவனிக்கத்தக்கது. ஸ்தாவரங்கள் கண்ணனை தேனில் அபிஷேகம் செய்து புஷ்பங்களால் அர்ச்சித்து, தங்கள் கொம்புகளை வளைத்து, தாழ்த்தி, பெருமாள் திரும்பும் இடம் எல்லாம் ஸேவிக்கின்றன. அவனது குழல் இசையில் மயங்கிய வான் இளம்படியர், நித்யஸூரிகள், வானகத்து மன்றாடிகள், பசுக்கூட்டங்கள், மான் கணங்களின் மருட்சி இவற்றின் செயல்களைக் காட்டிலும் மரங்களின் செயல்களே மிகவும் உசிதமாகத் தோன்றுகிறது. ஏனெனில் **ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை** என்னும் படி நாளும் புது மலர்களால் அர்ச்சித்து தாளும் தடக்கையும் கூப்பி **சரணாகதி** என்கிற செய்கையே மிக அவசியம் என்று காட்டுகின்றன.

பாண்டவர்க்காய் அன்று தேர் ஊர்ந்தவன், தன் குழலினிசை மூலம் ஸ்தாவரங்களையும் கூட தன் வசப்படுத்தி அவன் திருவடிகளில் சரண் புக வைக்கும் மாயன். அவனே **அகடித கடநா ஸாமர்த்யன்.** கண்ணனின் ராஜ்யத்தில் ஸ்தாவரங்களும் சரணாகதி தத்வம் விளிக்கின்றன. இங்கு ஆழ்வாரின் பாசுரப்பாங்கு கொடுக்கும் உண்மை இதுவே. செம்பெரும் தடங்கண்ணனாகிய தேவகி சிறுவனின் திருவடித் தாமரைகளை நாமும் உஜ்ஜீவனமாகப் பற்றவேண்டுமென பெரியாழ்வார் அருளிச்செய்கிறார்.

பூமியின் பாரம் போக்க வடமதுரையில் அவதரித்து அர்ஜுனன் தேர்த் தட்டில் ப்ரணவத்தின் பொருளாய் தாழ நின்று உயர்ந்த உபதேசங்களை உரைத்த உத்தமனின் திருவடிகளைப் பற்றுவாரை அவன் ஒருபடியும் கைவிடான். தன் திருவடிகளை விரும்பி தொழும் அடியவர்க்கு என்றுமே அவன் மெய்யனாவான்.

பெரியாழ்வாரை வழித்துணையாகக் கொண்டு அந்த சரணாகத வத்ஸலனான கோவிந்தனைத் தொடர்ந்து என்றும் விடாமல் நாமும் சரணடைவோம். ஏனெனில் அவன் பாத நிழலல்லால் மற்றோர் உயிர்ப்பிடம் நாம் எங்கும் காண்கிலோம். ❊

Sponsorships and donations towards publication expenses are welcome

ஸ்ரீ:

எம்பெருமானின் எளிவு எத்திறம்! எத்திறம்!!

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

அகிலஹேய ப்ரத்யநீக கல்யாணைகதாநனான ச்ரிய: பதி தன் அடியவர்களிடத்தில் ஸௌலப்யம், ஸௌசீல்யம், வாத்ஸல்யம் போன்ற திருக்கல்யாண குணங்களைக் காட்டி அவர்களை வசீகரிக்கின்றான். அவனை எதிர்க்கும் துஷ்டர்களிடத்தில் பரத்வம், ஸர்வ சக்தித்வம், வீர்யம் போன்ற குணங்களை வெளிப்படுத்தி ஆச்ரித ரக்ஷகத்வத்தையும் தர்மத்தையும் ஸ்தாபனம் பண்ணுகின்றான். திசேதனர்களை ரக்ஷிக்கும் தசையில் எம்பெருமானின் அகடிதகடனா ஸாமர்த்யமானது அவர்களின் அறிவு நிலைக்கு எட்டாத ஒன்றாக உள்ளது.

அப்பெருமானுக்குள்ள பெருமையை அளவிட்டு அறிய வல்லார் யாருமில்லை.

தேருங்கால் தேவன் ஒருவனே என்றுரைப்பர்
ஆருமறியார் அவன்பெருமை ஓரும்
பொருள்முடிவும் இத்தனையே எத்தவம் செய்தார்க்கும்
அருள்முடிவது ஆழியான் பால்
[நான்முகன் திருவந்தாதி - 2]

ஸர்வஜ்ஞனான அந்த எம்பெருமான் **''தாம் தம் பெருமையறியார்''** என்றபடி தானும் தனது பெருமையை அறியகில்லான்.

ஸ்ரீமந்நாராயணின் பரத்வத்தை எவ்வளவு விரிவாக உரைத்தாலும், பேசித் தலைக்கட்ட முடியாது. ஆதிமுதல்வனாய், நித்யஸூரி நிர்வாஹகனாய் திருப்பாற்கடலிலே திருக்கண் வளர்ந்தருளியிருப்பதும், அமரர்க்கு அமுதமளிக்கக் கடல் கடைந்தபோது மந்தரமலையைத் தாங்குவதற்க்காக ஆமையாக உருவெடுத்ததும், தேவதாவர்க்கங்களையும் அவர்களுக்குப் பல உலகங்களையும் ஸ்ருஷ்டித்தும், வாமனனாக வந்து மூவடி நிலம் பெற்று அளந்து கொண்டதும், மஹாவராஹமாய் அண்டபித்தியில் நின்றும் ஒட்டு விடுவித்துக் கொண்டதுமாகிய இத்தகைய செயல்கள் அவன் மேன்மைக்கு எல்லையில்லை என்பதனை ஸ்தாபிக்கின்றன.

எது மிக உயர்ந்ததாய் இருக்குமோ அது அடைவதற்கு மிகமிக அறியதாய் இருக்கும். எது மிகவும் ஸுலபமாகக் கிடைக்குமோ அதனைப் பற்றுவதனால் யாதொரு பயனும் இருக்காது. இது உலக நியதி.

வைகுண்டேது பரேலோகே ச்ரியாஸார்த்தம் ஜகத்பதி:|
ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தை: பாகவதை: ஸஹ||

என்று புராணங்கள் கொண்டாடும் ஸ்ரீ வைகுண்டத்தில் அயர்வறும் அமரர்கள் அதிபதியாய் வீற்றிருக்கும் பரமபதநாதனிடத்தில் பரத்வமே ப்ரதானமாகத் தலைக்கட்டும். அங்கே அவன் ஸௌலப்யமானது பகலில் ஏற்றிய விளக்கு போல, ஆனால் அத்திருக்குணம் இருட்டறையில் விளக்குப்போலே பிரகாசிப்பது விபவ மற்றும் அர்ச்சாவதாரங்களிலே.

''அம்மான் ஆழிப்பிரான் அவன் எவ்விடத்தான்?'' ஆனால் அடியேனோ **''நீசனேன் நிறைவொன்று மிலேன்''** இப்படியிருக்க அவனுக்கும் நமக்கும் என்ன சேர்த்தியுண்டு? என்றெண்ணி அவன் பரத்வத்தை நினைத்து விலகிச் சென்றாலும் அடியவர்க்கு மெய்யனான எம்பெருமான் தன் திருவவதாரங்கள் மூலம் ஸௌலப்ய, ஸௌசீல்யங்களை நன்கு வெளிக்காட்டி நாம் பற்றுவதற்கு ஹேதுவாய் இருந்து நம்மை உய்விக்கின்றான்.

துஷ்டநிக்ரஹ, சிஷ்டபாரிபாலனங்களை ஸங்கல்ப மாத்ரத்தினால் செய்தால் தன் திருக்கல்யாண குணகங்கள் தரம் பெறாது என்பதாலேயே ஆச்ரித ரக்ஷணார்த்வத்தை திருவவதாரங்கள் மூலம் அவர்கள் இருக்குமிடங்களெல்லாம் தேடித்திரிந்து தன் திருக்கைதொட்டுச் செய்கிறான் பெருமான்.

அவ்வவதாரங்களிலும் நீர்மைக்கு எல்லையாய் நின்றது ஆயர் குலத்தினில் அணிவிளக்காய், கண்ணனாய்த் தோன்றிய க்ருஷ்ணாவதாரத்திலே.

எளிவரும் இயல்வினன்

ச்ரிய: பதியான எம்பெருமான், பரமபதத்திலே கைங்கர்ய ஸாம்ராஜ்யத்துக்கு அதிபதியாய் இருப்பினும் தன் பரத்வ ஸ்வரூபத்தை மறைத்துக் கொண்டு தன்னைச் சரணடையும் சேதனர்களின் மேல் கொண்ட பக்ஷபாதத்தினால் தயையே திருவுள்ளமாய்க் கொண்டு, அவர்கள் பற்றுவதற்கு ஹேதுவாய் **''ஸ்ரீவைகுண்ட விரக்தாய ஸ்வாமி புஷ்கரிணீ தடே''** என்றபடி பரம ஸௌலப்யத்துடன் ஸ்ரீவைகுந்தத்தில் இருந்து இ(ற)ரங்கி வந்து, ஸ்ரீநிவாஸனாக திருமலையில் நித்யவாஸம் செய்கிறான். அப்பெருமானின் பிரிவைப் பொறுக்க மாட்டாது நித்யரும் கூட தேசோசிதமான தேஹங்களைப் பரிக்ரஹித்துக்கொண்டு திருமலையிலே வந்து அவனுக்கு நித்யகைங்கர்யங்கள் பண்ணுகின்றனர்.

கண்ணாவான் என்றும் மண்ணோர் விண்ணோர்க்கு
தண்ணார் வேங்கட விண்ணோர் வெற்பனே. (திருவாய்மொழி 1-8-3)

திருமலையானது மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும் பொதுவான தலமாகவும் அம்மலையிலே வீற்றிருக்கும் திருவேங்கடவன் இருதலையார்க்கும் பொதுவாய் நிற்கிறான் என்று ஸ்வாமி நம்மாழ்வார் அவனது பரத்வத்தையும் ஸௌலப்யத்தையும் மங்களாசாஸனம் பண்ணுகிறார்.

திருவேங்கடவன் எண்ணற்ற திருக்கல்யாண குணங்களை உடையவனாயிருப்பினும் அவனுடைய மற்ற குணங்களனைத்தும் தரம் பெறுவது அவன் தயையாலேயே என்பதனை ''தயா சதகம்'' என்னும் ஸ்தோத்ரத்தின் மூலம் ஸ்வாமி தேசிகன் நிர்தாரணம் பண்ணுகிறார்.

''மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள் சந்தி செய்ய நின்றான்'' என்று திருப்பாணாழ்வாரும், **''விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு''** என்று ஸ்வாமி தேசிகனும் பாசுரமிட்டது இங்கு அநுஸந்திக்கத்தக்கது.

வெண்ணெய் களவு செய்கிற தன்னை யசோதைப் பிராட்டி அடிக்கடி தாம்பினால் கட்டி விடுகிறாளென்று வீட்டிலுள்ள அனைத்துக் கயிறுகளையும் துண்டு துண்டாக அறுத்து வைத்தாலும் அவற்றை அவள் ஒன்றோடொன்று முடிபோட்டு ஒரு கயிறாக்கி அதுகொண்டு கண்ணபிரானைக் கட்ட முற்படுவள்; அப்படிக் கட்டும்போது தன் திருமேனிக்கு சுற்று போராமல் அக்கயிற்றினால் கட்ட முடியாதபடி எளிதில் தன்னைத் தப்பித்துக்கொள்ள வல்லவனாயினும் தனது ஸௌலப்யத்தை வெளியிடுவதற்கென்றே பரத்வநிலையைத் தவிர்த்து மநுஷ்ய ஸஜாதீயனாக ஒரு சுற்றுக்கும் போராத தாம்பு இரண்டு மூன்று சுற்றுக்குப் போரும்படி தன் பருத்த திருமேனியைச் சுருக்கி அமைத்துக் கொண்டு **'கண்ணி நுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்பண்ணிய பெருமாயன்''** என்றபடி உரலோடு கட்டுண்டு இருப்பனாம். மேலும் ஆய்ச்சி அடிக்க தன்னுடைய ஸௌசீல்ய ஸௌலப்ய குணங்கள் நன்கு விளங்கப்பெற்று அவதார ப்ரயோஜனம் நிறைவேறப்பெற்றதை எண்ணி முகமலர்ந்திடுவனாம் கண்ணபிரான்.

அடைக்கலத்தோங்கு கமலத்தலரயன் சென்னியென்னும்
முடைக்கலத் தூண் முன் அரனுக்கு நீக்கியை, ஆழிசங்கம்
படைக்கலம் ஏந்தியை வெண்ணெய்க்கு அன்றாய்ச்சி வன் தாம்புகளால்
புடைக்கலந்தானை எம்மானை என்சொல்லிப் புலம்புவனே?
[திருவிருத்தம் - 86]

முன்பொரு ஸமயத்தில் எவராலும் தீர்க்க முடியாத பரமசிவனின் ப்ரஹ்மஹத்தி தோஷத்தை ஒரு கை பிக்ஷையிட்டுப் போக்கியருளின பரமன் இங்கு ஒரு கைப்பிடி வெண்ணெய்க்காக இப்படி கட்டுண்டும் மொத்துண்டும் **(ஆயர்கொழுந்தாய் அவரால் புடையுண்ணும் மாயப்பிரான்)** இருப்பதை நினைத்து ஆற்றாமை கொண்ட ஸ்வாமி நம்மாழ்வார், மேலும்

பத்துடை அடியவர்க்கு எளியவன், பிறர்களுக்கரிய
வித்தகன் மலர்மகள் விரும்பும் நம் அரும்பெறலடிகள்
மத்துறு கடை வெண்ணெய் களவினில் உரவிடையாப்புண்டு
எத்திறம்! உரலினொடு இணைந்திருந்தேங்கிய எளிவே.
[திருவாய்மொழி 1-3-1]

என்று ஆயர்குலத்துக்குச் சுலபனாயும் அவனை அறியாத கம்ஸ, துரியோதனாதிகளுக்கு அரியனாயும் இருக்கும் அம்மாயப்பிரானின் மேன்மையையும் எளிமையையும் எண்ணி உள்ளம் உருகிக் கரைந்து பல மாதங்கள் மோஹித்துக் கிடந்தார்.

பாயாதீஷத் ப்ரசலிதபதோ நாபகச்சந்ந திஷ்டந் !
மித்யா கோபஸ்ஸபதி நயநே மீலயந் விச்வகோப்தா !!
[கோபால விம்ஸதி - 5]

ஸௌலப்யத்தோடு இணங்காத பரத்வமும், பரத்வத்தோடு இணங்காத ஸௌலப்யமும் நிறம்பெறாது என்பதாலேயே எம்பெருமான் இரண்டொடுங்கூடி ஆயர்புத்திரனாக திருவவதரித்தான். இடையன் வேடம் தரித்து வெண்ணெயைத் திருடித் தன் தாயிடம் அஞ்சி நடுங்கும் கபட நாடகத்தை நடத்தும் இவனே தரணியனைத்தையும் ரக்ஷிப்பவன் என்று கொண்டாடுகிறார் ஸ்வாமி தேசிகன். **''அகில புவந ரக்ஷா கோப வேஷஸ்ய விஷ்ணோ:''** என்றபடி.

எம்பெருமானுடைய திருமேனியின் வைலக்ஷண்ய மானது அப்ராக்ருதமானதும், எல்லையற்ற அழகையும், மேன்மையையும், காந்தியையும் கொண்டது.

கட்டுரைக்கில் தாமரை நின் கண், பாதம், கை ஒவ்வா,
சுட்டுரைத்த நன்பொன் உன் திருமேனி ஒளி ஒவ்வாது,
ஒட்டுரைத்து இவ்வுலகுன்னைப் புகழ்வெல்லாம் பெரும்பாலும்,
பட்டுரையாய்ப் புற்கென்றே காட்டுமால் பரஞ்சோதீ
[திருவாய்மொழி 3-1-2]

என்றபடி அத்திருமேனியின் பெருமையை ப்ராக்ருத வஸ்துக்களோடே ஒப்பிட்டு இவ்வுலகத்திலுள்ளோர் த்ருஷ்டாந்தம் இட்டுக் கூறுவது சிறிதும் பொருந்தாது.

அப்பேர்ப்பட்ட திவ்ய மங்கள திருமேனியைப் பசுக்கள் நிறைந்த கொட்டகைகளில் புகுத்தியும் **(பூணித் தொழுவினில் புக்குப் புழுதியளைந்த பொன்மேனி),** வடமதுரை நகர்ப் புழுதி மண்ணில் அலைந்தும், காடுகளில் உரைந்தும் **(கானகமெல்லாம் திரிந்து உன் கரிய திருமேனி வாட)** அவன் வாட்டிக் கொண்டது ஆச்ரித பக்ஷபாதத்தினாலன்றோ! தன் பச்சை மாமலை போல் மேனியைப் புழுதியால் கருத்த நிறமாகவும், வெண்ணெயால் மொச்சை நாற்றத்தையுடையதாயும் ஆக்கிக் கொண்ட அவன் நீர்மைக்கு எல்லையுண்டோ!

அந்நாளில் த்ரிவிக்ரமனாய் உயர்ந்து மூவுலகையும் அளந்து தன் ஸர்வசக்தித்வத்தை நிர்தாராணம் பண்ணின அவன் வல்லமையைக் கண்டு மோஹித்த நப்பின்னை ப்ராட்டி ஓங்கி உலகளந்த உத்தமன், அம்பர மூடறுந்தோங்கி உலகளந்த உம்பர் கோமானே, அன்று இவ்வுலகம் அளந்தாய் என்று அவன் திருவடியின் மேன்மையை அநுபவிக்கிறாள். ஸ்வாமி நம்மாழ்வாரோ **''ஆறெனக்கு நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்''** என்று அடியவர்களை ஆட்கொண்டு ரக்ஷிக்க எம்பெருமான் உபாயமாக தன் திருவடியையே தந்தருளுகிறான் என்று அத்திருவடி தொழுதெழுகிறார். வானவர்களின் தலையை அலங்கரிக்கும் அத்திருப்பாதங்களை ஸ்பர்சித்துத் தாங்கும் பாதுகைகளின் பெருமையை லக்ஷக்கணக்கான ச்லோகங்களால் விவரித்தாலும் அதன் மஹிமையை முழுவதுமாகப் பாடித் தலைக்கட்ட முடியாது என்று ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரத்தில் அருளுகிறார்.

நிற்க, அவ்வைகுந்தக்குட்டனோ ஆயர்பாடியில் தன் திருப்பாதங்களைத் தானே சுவைத்துக் கொண்டிருக்கும் திவ்யசேஷ்டிதம் தான் எப்படிப்பட்டது!

சீதக்கடலுள் அமுதன்ன தேவகி
கோதைக் குழலாள் அசோதைக்குப் போத்தந்த
பேதைக் குழவி பிடித்துச் சுவைத்துண்ணும்
பாதக் கமலங்கள் காணீரே! பவளவாயீர் வந்து காணீரே!
[பெரியாழ்வார் திருமொழி 1-3-1]

உன் திருப்பாதங்களை நீ சுவைத்துக் கொண்டிருப்பது ஆழ்வார்கள் **''தேனே மலரும் திருப்பாதம்''** என்று அவற்றை ஏற்றுவதாலா அல்லது அறிவொன்றுமில்லாத ஆயர்குலத்தில் தோன்றியதால் அக்குலத்திற்குத் தகுந்த செயல்களைச் செய்யவேண்டுமென்பதாலா அல்லது ப்ரளய காலத்திலே நீ உன் திருவயிற்றில் ஒளித்து வைத்த எல்லா வஸ்துக்களையும் உஜ்ஜீவிக்க வேண்டுமென்பதாலா? இல்லை. அவை நீ விழுங்கிய மண் கட்டிகளைக் கரைப்பதற்கான மருந்தா மாயோனே?

அவனாம் இவனாம் உவனாம் மற்றும்பர்
அவனாம் அவனென்றிராதே அவனாம்
அவனே எனத்தெளிந்து கண்ணனுக்கே தீர்ந்தால்
அவனே எவனேலுமாம்.
[பெரிய திருவந்தாதி - 36]

சில ஸமயங்களில் எம்பெருமான் ஸுலபன் என்றும் சில ஸமயங்களில் துர்லபன் என்றும் மற்றுஞ் சில ஸமயங்களில் நடுத்தரமாயுள்ளவன் என்றும் தோன்றும். பின்னும் சில ஸமயங்களில் 'அவன் மிக உயர்ந்தவன், மேலோர்க்கும் மேலானவன், அவனைப் பெறுதல் கூடுமோ' என்று தோன்றும். ஆக இப்படியெல்லாம் பலபடியாகத் தோற்றும் தோற்றங்களைத் மறந்து அப்பெருமானுக்கு ஸௌலப்யமொன்றே அஸாதரணமான குணம் என்று தெளிந்த ஞானத்தைப் பெற்று அக்கண்ணபிரானுக்கே ஆட்பட்டுவிட்டால் அவன் நமக்கு ஸகலவித பந்துவமாய் நின்று எல்லா நன்மைகளையும் செய்தருள்வான்.

ஜயது ஜயது தேவோ தேவகீநந்தகோயம்
ஜயது ஜயது க்ருஷ்ணோ வ்ருஷ்ணிவம்சப்ரதீப: !
ஜயது ஜயது மேகச்யாமல: கோமலாங்க:
ஜயது ஜயது ப்ருத்வீபாரனாசோ முகுந்த: !!
[முகுந்தமாலை -2]

என்று அவனுக்கு பல்லாண்டு பாடி அவனது திருவடியை எந்நாளும் மறவாதிருக்கும் படியை அருளுமாறு ப்ரார்த்திப்போம்.

ஸ்ரீ தேசிக மொழி

பெருமைமிக்க தயாதேவியே, உயரமான மலைமீதுள்ள திருவேங்கடமுடையானையே உன் வெள்ளத்தில் மூழ்கச்செய்துள்ளாய். அப்படியிருக்க என் பாபங்களும் உன் வெள்ளத்தில் மூழ்க விடுவதில் தடை உண்டோ? அவனது கல்யாணகுணங்களில் நீயே முதன்மை பெற்றிருப்பதால், நீ நிறைந்திருப்பதால், அவன் என்னைக் கடாக்ஷித்து பாபங்களைப் போக்கி என்னைக் காத்தருள்வான்.

ஸ்ரீ தயா சதகம் - 13

13. Sri Devanayaka Panchasath

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

In Sri Devanayaka Panchasath, an exquisite hymn of 53 slokas, Swami Desika extols the greatness and beauty of Lord Devanatha of Thiruvaheendrapuram. The temple here is set in picturesque and tranquil surroundings what with the Aushadha Giri, a hillock abode of Lord Hayagriva, overseeing it in the front and River Garuda forming the rear.

The deity, an immense favourite and one close to the heart of our Acharya, is also known as Daasa Sathya or Adiyavarkku Meyyan (அடியவர்க்கு மெய்யன்), meaning one who is truthful to His devotees. There are umpteen references in which he addresses the Lord by this name. True to his self, Swami Desika (கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன்), follows in the footsteps of Kaliyan who, in his Periya Thirumozhi, refers the Lord as 'Adiyavarkku Meyyan'. "அடியவர்க்கு மெய்யனாகிய தெய்வநாயகனிடம் மெய்தகு வரைச்சாரல்..." (313).

Lord Devanatha with His Consort

In an enchanting invocation, the author seeks protection of the Lord who has the eyes akin to the petals of a lotus; whose lotus feet glisten with the honey oozed from the garlands adorning the crowns of the gods who bow at His feet; and who is held in great veneration and worshipped by Brahma and Siva.

He then pays obeisance to the Acharya Parampara, sages like Valmiki and Vyasa, before seeking the commendation of Piraatti in the fourth Sloka. He pleads, "O Mother, dweller in the lotus, listen to my submission! Please make the Lord of gods, Your beloved, accept the prattles of this child!"

In the next Sloka, Sri Desika stakes his right to compose the hymn, with a fitting analogy. "What if Your greatness is extolled by Upanishads. That wouldn't stop me from singing Your praise as I

think I am also competent to do so in my own little way. Even as herds of cows drink larger amounts out of the Milky Ocean, new-born calves can also drink a little".

Further, the author notes that, the Lord has no option but to fulfil his wish of praising Him, for, it is only in His interest that He must do so in order to safeguard His name 'Daasa Sathya'.

Having established 'his right' and 'His duty', Swami Desika delves into the beauty of Lord Devanatha's Divine Form and comes up with eloquent, exhaustive and expansive narration through 30 Slokas (from 16 to 45).

It is customary, while describing the Lord's elegance, to start from the feet and go upward till the crown (Paadhadhi Kesam). This is known as the Aarohana Krama (ascending order). The reason is not too far to seek. His feet are instrumental in invoking His grace. They are the mean-all and end-all of deliverance. Familiar examples of this order are ThirupPaanaazhwar's Amalanaadhi Piran and Sri Bhagavath Dhyana Sopanam, composed by Swami himself.

But here, our Acharya, struck by Lord Devanatha's stunning beauty and, perhaps, in a state of the resultant bliss, takes recourse to the Avarohana Krama (descending order), which is normally associated with description of humans. This reveals another dimension of Sri Desika's disposition as regards the Lord – Sahaja Bhaava – utmost familiarity which lessens the distance between the Lord and His devotee while shelving the concept of His supremacy, albeit temporarily. This is truly reflective of one of the great qualities of the Lord – Soulabhya (easy accessibility).

It is pertinent here to recall his own enunciation in the Tamil Prabandham 'Navamani Maalai' – "நின் வடிவழகு மறவாதார் பிறவாதாரே" (6), meaning those who do not forget Your beauty are sure to rid of further birth.

Starting from His crown, our Acharya describes the Divine beauty in the following order (No. of the 30 Slokas in parentheses):

Crown (16)	Forelock (17)	Face (18)
Forehead (19)	Oordhvapun-dra (Thiru-man) (20)	Ears (21)
'Makarika' (22)	Eyebrows (23)	Eyes (24)
Eye glances (25)	Nose (26)	Lips (27)
Neck (28)	Hands (29)	Sankha and Chakra (30)
Abhaya Hastha (31)	Chest (32)	Vanamala (33)
Mind (34)	Waist (35)	Navel (36)
Girdle-belt (37)	Thighs (38)	Knees (39)
Shanks (40)	Feet (41)	Toes (42)
Nails (43)	Feet (again) (44)	Pollen of feet (45)

In the following Slokas (46 and 47), Swami Desika brings out the infinite superiority of Prapathi (surrender) over Bhakthi (devotion), before surrendering his soul at the feet of the Lord. He reasons that more than Prahlada, herds of cattle (of the Gokula), Gajendra and Pareekshith put together, he deserves to be saved by Him, as his plight is more pathetic than theirs.

The author concludes this fascinating hymn, enlisting the greatness of the Lord. While reminding Him of His name – Daasa Sathya – he says that singing His praise makes himself the Speaker of Truth (Sathya Vaadhee) as is evident in this Sthothra. So will be all those who recite Sri Devanayaka Panchasath.

To be continued…

With Best Compliments from:

Sridhar Parthasarathy & Family,

Luz Church Road, Mylapore, Chennai - 600004.

SVDD thanks Sri Sridhar Parthasarathy & Family

for sponsoring this month's issue of Desika Sandesam

விகாரி நவராத்ரி உத்ஸவம் - ஆஸ்தானம்

ஸ்வாமி தேசிகன் வார்ஷிக மஹோத்ஸவம்
செப்டம்பர் 18 முதல் 27 வரை